சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.12.08.2025.
OS.No.725/2018
DW2 : பெரியசாமி (வயது 57 ) த/பெ. மாரிமுத்து
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**வாதிகள் தரப்பு கு.வி**

திருச்சி, சமயபுரம் கிராமத்தில் ஸ்ரீ ராகவேந்திரா உறவே பார்க் என்ற பெயரில் மனை இடங்கள் போடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த லே அவுட்டில் சுமாராக 150 முதல் 200 பிளாட்டுகள் இருக்கும். மேற்படி லே அவுட்டின் சர்வே எண் என்ன என்று தெரியுமா என்றால் சர்வே.85/11. மேற்சொன்ன சர்வே எண்ணையும் சேர்த்து ஸ்ரீராகவேந்திரா உறவே பார்க் மனை இடங்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

மேற்படி லே அவுட் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட லே அவுட் என்றால் தெரியவில்லை. லே அவுட்டில் கண்டுள்ள ரோடு பஞ்சாயத்திற்கு கொடுத்துள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி லே அவுட்டில் வாதிகளுக்கு இடம் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் அனைவரும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் மேற்படி லே அவுட்டில் மனைகள் வாங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

மேற்படி லே அவுட்டில் உள்ள சர்வே எண்கள் யார் யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சமயபுரம் கிராமத்தில் எனக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் இருந்தது, அதனை விற்றுவிட்டேன். அவ்வாறு எனக்கு சொத்துக்கள் இருந்தத என்பதை காட்டுவதற்கான ஆவணம் உள்ளதா என்றால் அனைத்தையும் கொடுத்துவிட்டேன்.

தாவா சொத்திற்கான அனைத்து யுடிஆர் அ பதிவேடுகளை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் யார் யார் பெயர் இருந்தது என்றால் பார்வதி, சந்திரா, நல்லபொண்ணு, ராஜேந்திரன் ஆகியோர்கள் பெயர்களில் பதிவுகள் இருந்தது. சர்வே எண்.85/11 க்கு கட்டுப்பட்ட மூல பத்திரங்களை பார்த்துள்ளேனா என்றால்

பார்த்துள்ளேன், அவை அனைத்தும் பதிவு செய்த ஆவணங்கள். சர்வே எண்.85/11 ஐ பொது மக்கள் பாதையாக பயன்படுத்தி வரும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

பஞ்சாயத்தில் சர்வே எண்.85/11 ரோடாக பதிவாகியுள்ள விவரத்தை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கான வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி வில்லங்க சான்றிதழை பார்த்தால் யார் யாருக்கு சர்வே எண்.85/11ல் உள்ள சொத்துக்கள் சென்றுள்ளது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்.

தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், எனக்கு தாவா சொத்தின் உரிமை மூலம் மற்றும் சுவாதினம் பற்றி எதுவும் தெரியாது என்றும், பிரதிவாதிகளுக்கு வேண்டியவர் என்ற முறையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளிடமிருந்து பணம் பறிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/ signed/
பெரியசாமி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி